

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (Tamil Nadu Digital Transformation Strategy DiTN) ஆவணத்தை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் தீரஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் (Sports Quota) விளையாட்டு வீரர்கள் எஸ்.மனோஜ், ஆனந்தன் மற்றும் செல்வி.ரோஸிமீனா ஆகியோருக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நவம்பர் -5 திருவள்ளூரில் கழகத் தலைவர் - முதல்வர் தலைமையில்

# பாக முகவர்கள், பயிற்சி பாசறைக் கூட்டத்தில் அனைவரும் முழுமையாக பங்கேற்போம்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவு! க.சுந்தர் எம்.எல்.ஏ. தகவல்!

காஞ்சிபுரம். நவ.3-

திருவள்ளூரில் வருகின்ற நவம்பர் 5-ஆம் தேதி நடைபெறும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA 2 பயிற்சி பாசறை கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் அனைவரும் முழுமையாக பங்கேற்பது என காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்று க.சுந்தர் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாமண்டூர் மனோஜ் பவன் ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்ட கழக அவை தலைவர் ச. இனியரசு தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் தலைமைக்கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் சுபேர்கான் (காஞ்சிபுரம்), ஜெ.பச்சையப்பன் (உத்திரமேரூர்), கன்ஸ்டன்டைன் ரவிந்திரன் (மதுராந்தகம்) , கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் (செய்யூர்) ஆகியோர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி., டி.வி.கோகுலகண்ணன், திருமதி. கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.நாகன், டி. ஆர்.நாராயணன், ஆர்.டி. அரசு, எம்.எஸ்.சுகுமார், காஞ்சிபுரம் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, கே.ராஜேந்திரன், எஸ்.டி.பிரேம்சந்த், பொன். சசிக்குமார், எஸ்.உசேன், மதுராந்தகம் நகர செயலாளர் கே.குமார், வாலாஜாபாத் ஒன்றியக்குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், காஞ்சிபுரம் முருகன் பட்டு கூட்டுறவு சங்க தலைவர் ஏ.எஸ்.முத்து செல்வம், ஒன்றிய செயலா



ளர்கள் கெ.ஞானசேகரன், பி.எம்.குமார், க.குமணன், டி.குமார், பி.சேகர், பொன். சிவகுமார், சத்தியசாய், கே.கண்ணன், ஜி.தம்பு, கே.எஸ்.ராமச்சந்திரன், எஸ்.ஏழுமலை, இ.சரவணன், பி.எம்.பாபு, சிற்றரசு, எம்.எஸ்.பாபு, காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள், எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், பேரூர் செயலாளர்கள் என்.எஸ்.பாரிவள்ளல், என்.பாண்டியன், மோகன்தாஸ், வி.எழிலரசன், பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி. சம்யூக்த அய்யனார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், குணசேகரன், இ. அசோகன், நாத்திகம் நாராஜன், ஆ.சசிக்குமார், எஸ். மாலதி, டாக்டர் திவாகர், வ.மலர்மண் ணன், வ.வெங்கட்ராமன், டி.ஜெய் கணேஷ், திருமதி.கலைச்செல்வி, ஜகன்நாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெ.மணி, க.பால்ராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

முடிவில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ. தீர்மானங் களை விளக்கி பேசினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கழகத் தலைவரும், தமிழ்நாடு அரசு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வருகின்ற நவம்பர் 5-ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டத்தில் வாக்குச்சாவடி பொறுப்பாளர் பாசறை. சந்திப்போம் சந்திப்போம் கூட்டத்திற்கு நமது மாவட்டத்தில் இருந்து BLA 2கள் முழுவதுமாக கலந்துகொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.

2024-ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி 18 வயது நிறைந்த வாக்காளரின் பெயர்களையும் வாக்காளர் பட்டியரில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியரில் சேர்க்கவும் தொகுதியிரிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியரில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6-லும் பெயர் நீக்கம் செய்கிற படிவம் 7லும் வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம் முகவரி மாற்றம் நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement ID card) படிவம் 8லும் அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க NRI Voters படிவம் 6ஏ ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும்.

மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணையதளத்திலும் விண்ணப்பிக்கலாம் இது வரை வாக்காளர் பட்டியரில் பெயர் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புவர்களும் பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்ப படிவமாக படிவம் 6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும் குறிப்பாக படிவம் என் கலம் 4ல் மனுதாரர் அது முந்தைய முகவரியினை தவறாத எழுதிட வேண்டும்.

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04, 05-11-2022 மற்றும் 18, 19-11-2023. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 05-01-2024. மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகள் வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA 2 மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்தப் பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்றத் தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள (BLO) உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

நீட் விலக்கு நம் இலக்கு என்றும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நம் இளைஞர் அணி செயலாளர் முன்னெடுத்துள்ளார். அதை நம் மாவட்டத்தில் சிறப்பாக செய்து முடிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# பெருங்களத்தூர் வடக்குப் பகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை!

தாம்பரம். நவ.3-

பெருங்களத்தூர் வடக்குப் பகுதி கழக செயலாளர் மண்டலத்தலைவர் டி.காமராஜ் அறிக்கை வருமாறு

இன்று 3.11.2023 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் மேற்கு தாம்பரம் கோண் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக கழகத்தின் சார்பில் பகுதி கழக அவை தலைவர் டி. ஆர்.கோபி எம்.சி. தலைமையிலும் பகுதி கழகத் துணைச் செயலாளர்கள் ஜா.ரவிக்குமார், ஆர்.செல்வகுமார், லிங்கேஸ்வரி பாபு எம்.சி. மற்றும் பி.பாரதி, பகுதி பொருளாளர் ஆகியோர் முன்னிலையில் பகுதி பாக முகவர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டிருக்கின்ற வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு புதிய வாக்காளர் சேர்ப்பு நீக்கல் 5ம் தேதி திருவள்ளூரில் நடைபெறுகின்ற பாக நிலை முகவர்களின் பாசறை கூட்டத்தில் பகுதிக்கு உட்பட்ட பாக முகவர்கள் கலந்து கொள்வது குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

எனவே இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக்கு உட்பட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தேனி தெற்கு மாவட்டம்

# கம்பம் தெற்கு நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்டம், கம்பம் தெற்கு நகரச் செயலாளர் சூர்யா ஆர்.கே.செல்வகுமார், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **சி.பால்பாண்டிய ராஜா**, (15, பாரதியார் நகர் வடக்கு 7வது தெரு, கம்பம் 625 516. தேனி மாவட்டம்.) அவர்கள் கம்பம் தெற்கு நகர கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02.11.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



முதலமைச்சர் அவர்களால் வருகின்ற நவம்பர் 4 ஆம் தேதி தொடங்கப்படவுள்ள "நடப்போம் நலம் பெறுவோம் 8 கி.மீக்கான "Health Walk திட்டத்திற்கான பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (02.11.2023) சென்னை பெசன்ட்நகரில் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஐ.சி.எப்.வ.முரளிதரன் தலைமையில்

# கொளத்தூரில் உடன்பிறப்புகள் கொண்டாடும் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## கே.பாலகிருஷ்ணன் - எம்.எச்.ஜவாஹிருல்லா - சபாபதி மோகன் சிறப்புரை!

சென்னை, நவ. 3 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்க விழாவையொட்டி சென்னை கிழக்கு மாவட்டம் 54 "கலைஞர் என்றால்! காலம் தந்த தமிழமுது!" எனும் உடன்பிறப்புகள் கொண்டாடும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (3.11.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் பெரம்பூர், செம்பியம், ராகவன் தெருவில் கொளத்தூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எப். வ. முரளிதரன் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் துறை அமைச்சருமான பி. கே.சேகர்பாபு முன்னிலை வகித்து சிறப்புரையாற்றுகிறார். மேலும் மேற்குப் பகுதிச் செயாளர் எ.நாகராசன் எம்.சி., மாநில சட்ட துறை துணை செயலாளர் கே. சந்துரு, சி.மகேஷ்குமார், மண்டலகுழு தலைவர் சரிதா மகேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.தனசேகர் ஆகியோரும் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி கழக நிர்வாகிகள் பி.பழனி, இலா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எம். தாவூத்பீ, எல்.டி.தாமஸ், வட்ட செயலாளர்கள் டி.சந்திரசேகர், என்.பொன்முடி, பிடிசி.ரவி, பி.ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார், கே.பி.ஆதவன்மணி, மாமன்ற உறுப்பினர்கள் ச.ஸ்ரீதணி, யோக பிரியா தனசேகர், பி.அமுதா, கே.சாரதா, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.முரளி, கே.சந்தானம், பொன்னிவளவன், சி.சந்திரசேகர், எம். துளசி, எஸ்.பி.சதீஷ்பாபு, வெங்கடேசன், ஜி.செல்வம், பொன்புகழேந்தி, புரசை.ஜி.ராமகிருஷ்ணன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மனிதய நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு செயலாளர் சபாபதி மோகன், மேயர் பிரியாராஜன், கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி., கழக சட்டதிட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா. கிரிராஜன் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், கொளத்தூர் தொகுதி பொறுப்பாளர் இரா.விடுதலை, தேவஜவஹர், எஸ். பன்னீர் செல்வம், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.அசோக்குமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். 70-வது வட்டச் செயலாளர் பா.அன்பரசு நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதிக் கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழகச்செயல்வீர்கள் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் ஐ.சி. எவ்.வ. முரளிதரன் கேட்டுக் கொண்டுள்ளார்

### திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி

# ஒன்றியம்/பகுதி, நகரம், மற்றும் பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பது குறித்து

## அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக விளையாட்டு மேம்பாட்டு அணியில் ஒன்றியம்/ பகுதி நகரம், மற்றும் பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் பொறுப்புக்களுக்கு துணை விண்ணப்பிக்க அமைப்பாளர்களுக்கான ஆர்வம் உள்ள நபர்கள் அதற்கான விண்ணப்ப படிவங்களை www.dmksportswing.in என்கிற இணையத் தளத்தின் வாயிலாக தரவிறக்கம் செய்தோ அல்லது முரசொலி நாளிதழில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்தோ, வருகின்ற 20.11.2023க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களிடம் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா அறிவாலயம்,
நாள்: 02.11.2023

**தயாநிதி மாறன்**, எம்.பி.
செயலாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி

**தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி**

ஒன்றியம் - பகுதி - நகரம் - பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சுயவிவரப் படிவம்

மாவட்டம் : ..................

சட்டமன்றத் தொகுதி : ..................

ஒன்றியம் : ..................

பகுதி : ..................

நகரம் : ..................

பேரூர் : ..................

புகைப்படம்

விண்ணப்பிக்கும் பொறுப்பு :

☐ ஒன்றியம்/பகுதி அமைப்பாளர்
☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர்
☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்)
☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர் (மகளிர்)

☐ நகரம் அமைப்பாளர்
☐ நகரம் துணை அமைப்பாளர்
☐ நகரம் துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்)
☐ நகரம் துணை அமைப்பாளர் (மகளிர்)

☐ பேரூர் அமைப்பாளர்
☐ பேரூர் துணை அமைப்பாளர்
☐ பேரூர் துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்)
☐ பேரூர் துணை அமைப்பாளர் (மகளிர்)

பெயர் : ..................

தந்தை / கணவர் பெயர் : ..................

பிறந்த தேதி : .................. வயது : .................. கல்வித் தகுதி : ..................

முகவரி : ..................

மாநில/மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்று இருப்பின் அதன் விவரங்கள் : ..................

விருப்பமான விளையாட்டு : ..................

தொடர்பு எண் : ..................

மின்னஞ்சல் : ..................

இப்படிவத்தில் குறிப்பிட்ட எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன்

நாள் : (கையொப்பம்)

குறிப்பு 1) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டையின் நகல் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.
2) பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களிடம் வருகின்ற 20.11.2023-க்குள் ஒப்படைத்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஐ.சி.எம்.ஆர். கலைஞர் திடலில் நடைபெறவுள்ள சென்னை மண்டல வாக்குச்சாவடி பாகமுகவர்கள் (பிஎல்ஏ2) பயிற்சி பாசறை கூட்டத்திற்கான திடலில் திருவள்ளூர் மாவட்ட பொறுப்பு அமைச்சர் தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன், இராணிப்பேட்டை சுற்றுசூழல் அணி மாவட்ட அமைப்பாளர் வேதா சீனிவாஸ், இராணிப்பேட்டை தகவல் தொழில்நுட்ப அணியினர் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.